ஸ்ரீ ஜகதீஸ்வரீ ராஜ ராஜேஷ்வரி
சித்தம் இரங்கி அருள் (பரமேஷ்வரி)

பீஜாக்க்ஷர நிலயே சுந்தரி
பீதி நாசனீ பாப விமோசினி

ஓதற்கரியா ஒளியானவளே
உண்மைப்பொருளே ஓம் எனும் ஒலியே
சாதனை ஏதும் நான் செய்தறியேனே
வேதனை போதும் விரைவாய் வருவாய்

ஆனை முகத்தோனும் ஆறுமுகத்தோனும்
அம்மா எனவே அழைக்கும் பவானி
அடியேனும் உன் தனையனல்லவோ
ஆதரித்திடவே வருவாய் விரைவாய்

பிந்து நாத நிலயே நவாக்ஷரி
பண்டாசுர ஸம்ஹாரிணியே
புவனேஷ்வரியே லலிதாம்பிகையே
புன்னகை செய்தருள் ஹரிதாஸனயே